மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

# பேச்சுப் போட்டி 2022

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

## ஆண்டு 10/11

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம் !

## தமிழர் பண்பாடு

மக்களைச் சரியான பாதையில் அழைத்துச் செல்வது பண்பாடு. இது தலைமுறையாகக் கடந்து வருவது. பாரம் பரியமாகப் பயணிப்பது. காலத்திற்கேற்ப மாற்றமும் கொள்வது.

இயற்கை மீது நேசம், உயிர்கள் மேல் பாசம், மானம் காக்கும் தன்மை, பழியின்றி வாழ்தல், ஒழுக்கத்துடன் ஒழுகல், உண்ணும் உணவுகள், உடுத்தும் ஆடைகள், உறவுடன் கூடுதல், பின்பற்றும் சடங்குகள், கொண்டாடும் விழாக்கள் போன்றன தமிழர் பண்பாட்டின் கூறுகள்.

காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கற்புடைமை. உலக ஒற்றுமை என்பனவும் பண்பாட்டு அம்சங்களாகவே நோக்கப்படுகின்றது.



நதிக்கரைகளே நாகரிகத்தின் தோற்றம். அங்கிருந்து துளிர்த்ததுதான் வாழ்வியல் மாற்றம், மனித முன்னேற்றம், பண்பாட்டு ஏற்றம், வீட்டிலும் நாட்டிலும் மரங்களை வளர்த்து, இயற்கையைப் பேணி, அவற்றுடன் இணைந்து வாழும் பண்பு தமிழன் பண்பாடு. “ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்ற வள்ளுவன் வாக்குக்கு ஏற்ப தமக்கென ஒழுக்கம் வகுத்து புவியில் வாழ்தல் தமிழன் பண்பு.

வீரத்துடன் எழுந்து தன் சுற்றத்தையும் நினைந்து வினையாற்றும் போர்க்குணம் தமிழனுக்குரியது. ஈழத்தில் பிறந்து இனத்துக்காக வாழ்ந்த தமிழ்ப் போராளிகள் மானத்துக்கும் வீரத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டு.

கல்வி, கேள்வி, ஞானம் ஓங்கும் தமிழ்ப் பண்புமிக்க மக்களை பாங்குடன் உருவாக்கல் தமிழ்ப்பெண்கள் சிறப்பாகும்.

உறவினர்கள் கூடி, இளவல்களைச் சேர்த்து, சடங்குகள் கொண்டாடி, உறவுகளை வளர்த்து அடுத்த தலைமுறையையும் அணைத்துக் கொள்வது தமிழன் பண்பாடு என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.